# பத்திரிக்கை செய்தி

**லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக ஆவடி சார்பதிவகத்தின் முன்னாள் சார் பதிவாளர் மற்றும் இணை சார்பதிவாளர் ஆகிய இருவருக்கும் தலா நான்கு ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து, திருவள்ளூர் மாவட்ட முதன்மை குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்புரை.**

லஞ்சம் பெற்ற குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ள திரு.P.தமிழ்சுவை, த/பெ பரமசிவம், சார்பதிவாளராக ஆவடி அலுவலகத்தில் கடந்த 01.03.2013 முதல் 06.01.2014 வரை பணிபுரிந்துள்ளார். அதே அலுவலகத்தில் திரு.M.கோபிநாத், த/பெ. மாதவன், இணை சார்பதிவாளராக 01.03.2013 முதல் 06.01.2014 வரை பணிபுரிந்துள்ளார்.

புகார்தாரர் திரு.D.முரளி, த/பெ.தேவராஜ் என்பவர் கடந்த 16.12.2013 அன்று மாலை 6.30 மணிக்கு எதிரி-1 திரு.தமிழ்சுவையை சந்தித்து, தான் வாங்கிய நிலத்திற்கான ஆவண எண்.4551/2012 நிலுவையில் இருக்கும் கோப்பினை மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரைவில்லை) அவர்களுக்கு வழிகாட்டி மதிப்பை நிர்ணயம் செய்வதற்கு அனுப்ப வேண்டி கேட்டார். 30.12.2013 அன்று மேற்படி கோப்பினை அனுப்புவதற்கு எதிரி-1 தமிழ்சுவை கையூட்டாக ரூ.15,000/- தொகையை எதிரி-2 கோபிநாத் முன்னிலையில் கேட்டார். இது தொடர்பாக மீண்டும் புகார்தாரர் எதிரி-2ஐ 03.01.2014 மாலை 6.00 மணிக்கு சந்தித்தபோது, ஏற்கனவே கேட்ட தொகையை கொண்டு வந்தீர்களா என எதிரி-2 கேட்டுள்ளார். புகார்தாரர் கேட்டுக் கொண்டதன் பேரில் மேற்படி தொகை ரூ.13,000/- ஆக குறைக்கப்பட்டது.

திரு.D.முரளி லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத காரணத்தினால் திரு.P.தமிழ்சுவை, ஆவடி சார்வு பதிவாளர் மற்றும் திரு.M.கோபிநாத், இணை சார்பதிவாளர் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சிறப்பு புலனாய்வுக் குழுவில் 06.01.2014 அன்று புகார் கொடுத்தின் அடிப்படையில் குற்ற எண்.1/2014 என வழக்கு பதிவு செய்து எதிரிகள்

மீது பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 2 எதிரிகளும் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவ்வழக்கில் 26.06.2015 அன்று திருவள்ளூர் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர்/ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. எதிரிகள் திரு.தமிழ்சுவை, ஆவடி சார் பதிவாளர் சென்னை மற்றும் திரு.ஆ,கோபிநாத் ஆகியோருக்கு சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act, 1988 கீழ் நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ.10,000/- அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் 6 மாதகாலம் சிறைத்தண்டனையும் மற்றும் u/s.13(2) r/w.13(1)(d) of Prevention of Corruption Act, 1988-ன் படி நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ரூ.10,000/- அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் 6 மாதகாலம் சிறைத்தண்டனையும் விதித்து இன்று 12.09.2024 இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

# PRESS NOTE

## FORMERLY SUB REGISTRAR AND JOINT SUB REGISTRAR OF AVADI SUB REGISTRY, CHENNAI WAS CONVICTED FOR 4 YEARS UNDER RIGOROUS IMPRISONMENT FOR RECEIVING Rs.13,000/- AS BRIBE.

The Convicted accused Tr.P.Tamilsuvai, was working as sub Registrar, Avadi From 01.03.2013 to 06.01.2014 and Tr.M.Gopinath, Joint Sub Registrar, Avadi From 01.03.2013 to 06.01.2014.

The Complainant Tr.D.Murali on 16.12.2013 at 18.30 hrs met the accused- Tr.P.Tamilsuvai to forward the pending document (Doc. No.4551/2012) to District Revenue Officer (Stamps), Chennai for the fixation of guideline value to the land purchased by the complainant. Tr.P.Tamilsuvai demanded Rs.15,000/- to do this work.. Further, A1 Tr.P.Tamilsuvai forwarded the Doc.No.4551/2012 to DRO, (Stamps) Chennai on 30.12.2013 with the knowledge of A2 Tr.M.Gopinath, formerly Joint Sub Registrar. When the complainant met the accused-2 again on 03.01.2014 at 18.00 hrs, the AO-2 reiterated their earlier demand of Rs.15,000/-. After the request of the complainant he scaled down the demand to Rs.13,000/- with the pretext that the document was remain pending in their office.

Followed by this, the Complainant had preferred a complaint at DVAC on 06.01.2014 and a case in DVAC Hqrs Cr.No 01/2014 was registered and trap was laid. A-2 Tr.M.Gopinath accepted the bribe amount of Rs.13,000/- from the complainant and he took a sum of Rs.10,000/- and returned Rs.3000/- to the complainant with the instruction to handover the amount to Tr.P.Tamilsuvai. A-1 Tr.P.Tamilsuvai accepted the bribe amount Rs.3,000/- from the complainant and thereby both the accused committed an offence punishable under section 7 of Prevention of Corruption Act.1988. After materialising the trap, both accused were arrested and sent for remand.

After completion of investigation, Charge Sheet was laid before the Chief Judicial Magistrate Cum Special Judge, Thiruvallur on 26.06.2015. Today (12.09.2024) the Hon'ble Chief Judicial Magistrate pronounced the Judgment in this case by convicting both the accused P.Tamilsuvai, and M.Gopinath to

undergo Rigorous Imprisonment for 4 years and shall pay a fine of Rs.10,000/- for the offence committed u/s 7 of Prevention of Corruption Act, 1988 in default to undergo 6 months Simple Imprisonment and to undergo Rigorous Imprisonment for 4 years and shall pay a fine of Rs.10,000/- for the offence committed u/s.13 (2) r/w. 13 (1) (d) of Prevention of Corruption Act, 1988, in default to undergo 6 months Simple Imprisonment and to run the sentence concurrently.